பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
14 04 2026 7 15 PM

ஆகாஷவாணி

(Tune)

செய்திகள் -

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. போக்குவரத்து கட்டமைப்பு நாட்டின் உயிர்நாடியாக திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. பீகார் மாநில முதலமைச்சராக திரு Samrat Choudhary நாளை பதவியேற்க உள்ளார்.

4. மேற்காசியாவில் நிரந்தரமாக சண்டை நிறுத்தத்தை உறுதி செய்வது குறித்து அமெரிக்காவில் உள்ள இஸ்ரேல் மற்றும் லெபனான் நாட்டு தூதர்கள் இன்று ஆலோசிக்க உள்ளனர்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

- - இனி விரிவான செய்திகள் - -

>>>>><<<<<

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

குஜராத் தலைநகர் காந்திநகரில் அண்ணல் அம்பேத்கரின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்திய பின்னர் பேசிய அவர், கிராமங்கள் வளர்ச்சியடைந்தால் மட்டுமே நாடு முன்னேறும் என்று தெரிவித்தார்.

கிராமங்கள், நாட்டின் ஆன்மா என்று கூறிய அவர், சமூகத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு தரமான கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சமூக நல்லிணக்கத்துடன் செயல்பட்டால் மட்டுமே ஒட்டுமொத்த வளர்ச்சி என்ற இலக்கை எட்ட முடியும் என்று அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய குஜராத் மாநில ஆளுநர் திரு. Acharya Devvrat, அண்ணல் அம்பேத்கர், கல்வியின் மூலம் சமூகநீதியை நிலைநாட்டியதாக தெரிவித்தார்.

நாட்டின் கடைக்கோடி மக்களுக்கும் நலத்திட்டங்கள் சென்றடைந்தால் மட்டுமே, நாடு முழுமையான வளர்ச்சியடையும் என்று அவர் கூறினார்.

>>>>><<<<<

போக்குவரத்து கட்டமைப்பு நாட்டின் உயிர்நாடியாக திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் இன்று தில்லி – டேராடூன் பொருளாதார நெடும்பாதை திட்டத்தை தொடங்கிவைத்து பேசிய பிரதமர், கடந்த பத்தாண்டுகளுக்கு மேல், போக்குவரத்து கட்டமைப்புகளை விரிவுபடுத்துவதற்கான வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளதாக தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க இந்த கட்டமைப்புகள் பேருதவியாக இருக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

உத்தராகண்ட் மாநிலத்தின் வளர்ச்சியில், தில்லி – டேராடூன் பொருளாதார நெடும்பாதை முக்கிய பங்காற்றும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>><<<<<

பீகார் மாநிலத்தில் பிஜேபி சட்டமன்றக் கட்சித் தலைவராக திரு Samrat Choudhary இன்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதனையடுத்து, அம்மாநிலத்தின் முதலமைச்சராக, நாளை அவர் பதவியேற்க உள்ளார்.

பாட்னாவில் இன்று பிஜேபி மூத்த தலைவர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் முன்னிலையில் நடைபெற்ற கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், திரு Samrat Choudhary பிஜேபி சட்டமன்ற கட்சித்தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இன்று மாலையே ஆளுநரை சந்தித்து பீகாரில் ஆட்சி அமைக்க திரு Samrat Choudhary உரிமை கோர திட்டமிட்டுள்ளார்.

பிஜேபி சட்டமன்றக் கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டபின், திரு *Samrat Choudhary* வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பீகார் மக்களுக்கு சேவை செய்யும் புனிதமான வாய்ப்பு தமக்கு அளிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதனை அர்ப்பணிப்புடனும், முழு ஈடுபாட்டுடனும் தாம் மேற்கொள்ள உள்ளதாக கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் பீகார் மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் தாம் கொண்டு செல்ல பாடுபடப் போவதாகவும் திரு *Samrat Choudhary* தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இன்று பிற்பகல் பீகார் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார், தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இதனையடுத்து, அவரது அமைச்சரவையின் பதவிக்காலமும் முடிவுக்கு வந்தது.

திரு. நிதிஷ்குமார் மாநிலங்களவை உறுப்பினராக பொறுப்பேற்றுள்ளார்.

>>>>><<<<<

மகளிரின் முன்னேற்றம் மூலம் மட்டுமே நாடு வளர்ச்சியடையும் என்று சமூக ஆராய்ச்சி மைய இயக்குநர் டாக்டர் *Ranjana Kumari* கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு சட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த சட்டத் திருத்தத்திற்கு ஆதரவளிக்க வேண்டும என்று *Ranjana Kumari* கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

அதிக சரக்குகளை ஏற்றி செல்லும் வாகனங்கள் மீது அபராதம் விதிக்க வழிவகை செய்யும் தேசிய நெடுஞ்சாலை திருத்தச் சட்டம் நாளை முதல் அமலுக்கு வரவுள்ளது.

இதுதொடர்பாக, சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நெடுஞ்சாலைகளில் சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு சரக்குகள் வாகனங்களில் கொண்டு செல்வதற்கு இது வழிவகை செய்யும்.

திருத்தப்பட்ட சட்டத்தின்படி, பத்து சதவீதம் வரை அதிக சரக்குகளை ஏற்றிக் கொண்டு சென்றால் அபராதம் எதுவும் விதிக்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பத்து சதவீதம் முதல் 40 சதவீதம் வரை சரக்குகளை ஏற்றி சென்றால், அபராதம் இரட்டிப்பாக விதிக்கப்படும்.

40 சதவீதத்திற்கும் மேல் சரக்குகளை ஏற்றி சென்றால், நான்கு மடங்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது பெரம்பலூர் மாவட்டத்துக்கு உட்பட்ட பெரம்பலூர், குன்னம் தொகுதிகள்.

(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 182 mins.)

>>>>><<<<<

மேற்குவங்க மாநிலத்தில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப்பட்டியலை தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ளது.

அம்மாநிலத்தில் முதல்கட்டமாக 152 தொகுதிகளில் இம்மாதம் 23-ஆம் தேதி நடைபெறவுள்ள முதல்கட்டத் தேர்தலில் ஆயிரத்து 478 வேட்பாளர்கள் இறுதியாக களத்தில் உள்ளனர்.

*அம்மாநிலத்தில் இம்மாதம் 29-ஆம் தேதி 142 தொகுதிகளில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டத் தேர்தலில் ஆயிரத்து 448 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.*

*வேட்பாளர்களின் பட்டியல் அரசிதழிலில் வெளியிடப்படுவதாகவும் தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*மேற்காசியாவில் நிரந்தரமாக சண்டை நிறுத்தத்தை உறுதி செய்வது குறித்து அமெரிக்காவில் உள்ள இஸ்ரேல் மற்றும் லெபனான் நாட்டு தூதர்கள் இன்று ஆலோசிக்க உள்ளனர்.*

*அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மார்க்கோ ரூபியோவும் இதில் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*இதனிடையே, ஈரான் நாட்டின் ஹிஸ்புல்லா அமைப்பு இக்கூட்டத்தை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.*

*இந்நிலையில், அந்த அமைப்பின் தலைவர் திரு. நயீம் காசிம், லெபனான் அரசை தொடர்பு கொண்டு, இந்த பேச்சுவார்த்தை எந்த வகையிலும் பலனளிக்காது என்று தெரிவித்துள்ளார்.*

*இஸ்ரேல் படையினர், ஈரான் மீது நடத்திய தாக்குதலுக்கு தங்கள் அமைப்பு மூலம் பதிலடி கொடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

*ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி - கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.*

*சென்னையில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற கொல்கத்தா அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.*

--------------

தென்கொரியா சர்வதேச சேலஞ்ச் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Rithvik Bollipalli – Arjun Kadhe* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, *6-2, 6-3* என்ற செட் கணக்கில், பிரான்சின் *Clement Chidekh* – ஜெர்மனியின் *Daniel Masur* இணையை வென்றது.

*>>>>>END<<<<<*